# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

*2158 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்**

## பதவிகள் - வெற்றிடம்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

*பௌத்தசாசன, கலாசார மற்றும் மத அலுவல்கள் அமைச்சைச் சேர்ந்த தொல்பொருள் திணைக்களத்தின் நிறைவேற்று சேவைகள் வகுதியின் சட்ட அலுவலர் பதவிக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்*

பௌத்தசாசன, கலாசார மற்றும் மத அலுவல்கள் அமைச்சைச் சேர்ந்த தொல்பொருளியல் திணைக்களத்தின் சட்ட அலுவலர் பதவியில் நிலவுகின்ற வெற்றிடத்தை நிரப்புவதற்காக பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை.**- அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களில், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற தகுதிகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைச் சபையொன்றினால் நடாத்தப்படுகின்ற தகுதிகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் மீது உயரிய புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரர் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். அப்போது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (இல. 6 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிகளை வழங்கும் நடவடிக்கை முறைக்கு அமைவாக தகுதிகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

2. **தேவையான தகைமைகள் :**

(i) கல்வி/ தொழிற்றகைமைகள்.- உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

(ii) அனுபவம்.

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் மூன்று வருடங்களுக்குக் குறையாத காலம் சட்டத்தரணி ஒருவராக உயிர்ப்பான தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் (உயிர்ப்பான அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணங்களில் அனுபவத்தைப் பெற்றுக்கொண்ட காலம், திகதி மற்றும் அலுவலக முத்திரையை தெளிவாகக் குறிப்பிட்டு நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.)

அல்லது

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் அரசாங்க நிறுவனமொன்றில் சட்டத்துறையில் 03 வருடங்களுக்குக் குறையாத காலம் பின்வரும் பணிகள் சம்பந்தப்பட்ட அனுபவத்தினைப் பெற்றிருத்தல்:-

(i) வழக்குகள் சம்பந்தப்பட்ட சட்ட நடவடிக்கைகளை சட்டமா அதிபர் திணைக்களத்துடன் கூட்டிணைப்புச் செய்தல்.
(ii) உடன்படிக்கைகள் சம்பந்தப்பட்ட சட்ட நடவடிக்கைகள்.
(iii) சம்பந்தப்பட்ட சட்டங்கள் பற்றிய சட்ட நடவடிக்கைகள்.
(iv) சட்டமூலங்கள், சுற்றறிக்கைகள், ஒழுங்குவிதிகள் போன்ற சட்டமுறையான ஆவணங்களைத் தயார் செய்யும் அலுவல்கள்.
(v) பல்வேறு நியதிச்சட்ட நிறுவனங்களினால் நடாத்தப்படுகின்ற சட்ட அல்லது நீதிமன்ற நடவடிக்கைகள் அல்லது விசாரணை நடவடிக்கைகள்.
(இவ்விடயங்கள் செயலாளர், திணைக்களத் தலைவரால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றினால் உறுதிப்படுத்த வேண்டும்.)

(iii) உடற் தகைமைகள்.- அபேட்சகர்கள் ஒவ்வொருவரும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியான ஆரோக்கியத்தைக் கொண்டிருக்க வேண்டும் ;

(iv) பிற தகைமைகள் :

* இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;
* விண்ணப்பதாரர்கள் நல்லொழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டும் ;
* விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்து கொள்வதற்காக அவசியமாகின்ற தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

3. **சேவையில் அமர்த்தும் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது. தங்களுக்குரிய ஓய்வூதியத்திட்டம் தொடர்பாக அரசாங்கத்தால் எடுக்கப்படுகின்ற கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் உட்படுதல் வேண்டும். மேலும் தாங்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும். தாங்கள் காலத்துக்குக் காலம் அரசாங்கம் பிரகடனப்படுத்தும் விதத்தில் இந்த நிதியத்துக்கு உதவுதொகைகள் செலுத்துதல் வேண்டும் ;

(ii) இப்பதவி மூன்று வருட நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுகின்றது. பதவியில் நியமனம் பெற்று 03 வருடக் காலத்துக்குள் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு I ஆம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்;

(iii) 2014.01.21 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இன்படி பதவியில் சேர்ந்து 5 வருடக் காலத்துக்குள் சேவையில் சேர்ந்த மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழி பற்றிய தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன், அரசகரும மொழி அல்லாத மொழி மூலமொன்றில் சேவையில் சேர்ந்த அலுவலர்களால் நன்னடத்தைக் காலத்துள் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்;

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலொழுங்கு விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் திணைக்கள ஏனைய கட்டளைகளுக்கும் இப்பதவி உட்படுகிறது.

4. **வயதெல்லை.**- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் 21 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

(அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்காக உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

5. **சம்பள அளவுத்திட்டம்.**- இப்பதவிக்கு ரூபா 47,615.00-10 × 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - ரூபா 1,10,895.00 (SL-1-2016) மாதாந்த சம்பள அளவுத்திட்டமொன்று உரித்தாகிறது. (2016.02.25) ஆந் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 03/2016 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பளம் உரித்தாகிறது.

6. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படுகின்றன:

| | பாடம் | | உச்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித்தகைமைகள்** | | 25 |
| | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெறப்பட்ட துறை சம்பந்தப்பட்ட பட்டப்பின் படிப்புக்கு | 25 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற துறை சம்பந்தமாக பெறப்படுகின்ற பட்டப்பின் டிப்ளோமா அல்லது சட்ட டிப்ளோமா (ஒரு வருடத்திற்குக் குறையாத) | 20 | |
| | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றினால் பெறப்பட்ட சட்டம் பற்றிய பட்டம் | | |
| | - முதலாம் வகுப்பின் சித்தியொன்றுக்காக | 15 | |
| | - இரண்டாம் வகுப்பின் உயர் சித்தியொன்றுக்காக | 10 | |
| | - இரண்டாம் வகுப்பின் கீழ் சித்தியொன்றுக்காக | 05 | |
| | சட்டக்கல்லூரியின் இறுதி ஆண்டின் முதலாம் வகுப்பின் சித்தியொன்றுக்காக | 10 | |
| | சட்டக்கல்லூரியில் இறுதி ஆண்டின் இரண்டாம் வகுப்பின் சித்தியொன்றுக்காக | 05 | |
| | **குறிப்பு :** கௌரவ சித்தியொன்றுடன் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தால் மாத்திரம் 5 புள்ளிகள் வழங்கப்படுதல் வேண்டும். | | |
| | (ஆகக்கூடிய ஒரு தகைமைக்காக மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.) | | |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2020, சனவரி மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, சனவரி மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

| | பாடம் | | உச்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 02 | **மேலதிக தொழில் அனுபவம்** | | 35 |
| | **i. மேலதிக தொழிற்றகைமைகள் :** | 10 | |
| | அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற சம்பந்தப்பட்ட துறை பற்றிய ஓராண்டுக்கு மேற்பட்ட டிப்ளோமா ஒன்றுக்காக (டிப்ளோமா ஒன்றுக்கு 10 புள்ளிகள்) | | |
| | அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற சம்பந்தப்பட்ட துறை பற்றிய 06 மாதங்களுக்கு மேற்பட்ட மற்றும் ஓராண்டுக்குக் குறைந்த டிப்ளோமா கற்கைநெறி ஒன்றுக்காக (டிப்ளோமா ஒன்றுக்கு 05 புள்ளிகள் வீதம்) | | |
| | அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற சம்பந்தப்பட்ட துறை பற்றிய 03 மாதங்களுக்கு மேற்பட்ட மற்றும் 6 மாதங்களுக்குக் குறைந்த தராதரப்பத்திர கற்கை நெறி ஒன்றுக்காக (கற்கைநெறி ஒன்றுக்கு 03 புள்ளிகள் வீதம்) (இல. 01 இன் கீழான புள்ளிகளை வழங்கிய சான்றிதழ்களைத் தவிர்ந்த பிற) | | |
| | **ii. மேலதிக அனுபவம்** | | |
| | சட்டத்தரணி ஒருவராக அரசாங்க சேவையின் அல்லது தனியார் துறையில் அனுபவம் (ஆண்டொன்று 05 புள்ளிகள் வீதம் ஆகக்கூடிய 25 புள்ளிகள்) (06 மாதங்களுக்கு மேற்பட்ட மற்றும் ஓராண்டுக்குக் குறைந்த 02 புள்ளிகள்) | 25 | |
| | அடிப்படைத் தகைமையை பெற்றுக்கொள்வதற்காக தேவைப்படுகின்ற சட்டத்தரணி ஒருவராக செயலாற்றிய 03 வருட சேவைக்காலம் தவிர்ந்த) | | |
| | (20 வருடங்களுக்குக் குறையாத சேவைக் காலமொன்றைப் பூர்த்தி செய்யப்பட்ட சட்டத்தரணி ஒருவரின் அல்லது சனாதிபதி சட்டத்தரணி ஒருவரின் அல்லது நீதிபதி ஒருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழொன்றின் மூலம் மேலதிக அனுபவத்தை உறுதிப்படுத்த வேண்டும்.) | | |
| | மேற்கூறிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அரசாங்க அலுவலர்கள் அல்லது தனியார் துறையின் அலுவலர்களுக்காக நிறுவனத் தலைவரால் மேலதிக அனுபவம் உறுதிப்படுத்தும் போது விண்ணப்பதாரர் சட்டத்துறையின் பதவியொன்றில் சேவை செய்கின்றார் என சேவைச் சான்றிதழொன்றின்/சான்றிதழ்களின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். | | |
| 03 | **தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவு** | | 10 |
| | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டமொன்றுக்காக தகவல் தொழில்நுட்பம் பிரதான பாடமொன்றாகக் கற்றிருத்தலுக்காக | 10 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஒரு வருடத்திற்குக் குறையாத தகவல் தொழில்நுட்பம் பற்றிய டிப்ளோமா கற்கைநெறி ஒன்றுக்காக அல்லது 1500 மணித்தியாலங்களுக்காக | 07 | |
| | அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தகவல் தொழில்நுட்பம் பற்றிய தராதரப் பத்திர கற்கைநெறி ஒன்றுக்காக | | |
| | 06 மாதங்கள்/720 மணித்தியாலங்கள் | 05 | |
| | 03 மாதங்கள் /360 மணித்தியாலங்கள் | 03 | |
| | (உயரிய தகைமைக்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படுகின்றன) | | |
| 04 | **மொழித் தேர்ச்சி** | | 15 |
| | ஆங்கில மொழி மூலம் கற்ற பட்டப்பின் படிப்பு /பட்டம்/பட்டப்பின் சட்டமுதுமானிபட்டம்/சட்டமுதுமானி பட்டம் | 15 | |
| | (சம்பந்தப்பட்ட பரீட்சை வினாத்தாள்கள் அனைத்துக்கும் ஆங்கில மொழிமூலத்தால் விடையளித்திருக்க வேண்டும்) | | |
| | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில மொழி பற்றிய டிப்ளோமா கற்கைநெறி ஒன்றுக்காக (01 வருடம் அல்லது 1500 மணித்தியாலங்கள்) | 10 | |
| | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில மொழி பற்றிய தராதரப்பத்திர கற்கை நெறி ஒன்றுக்காக | | |
| | - 06 மாதங்கள்/720 மணித்தியாலங்கள் | 07 | |
| | - 03 மாதங்கள்/360 மணித்தியாலங்கள் | 05 | |
| | (உயரிய தகைமைக்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படுகின்றன.) | | |
| 05 | **நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமை** | | 15 |
| | (i) பொது அறிவு மற்றும் விவேகம் | 05 | |
| | (ii) சட்டத்துறையின் நூதன போக்குகள் பற்றிய அறிவு | 05 | |
| | (iii) தெளிவாகக் கருத்துக்களை வெளிப்படுத்தும் ஆற்றல் மற்றும் ஆளுமை | 05 | |
| | முழு மொத்தம் | | 100 |

7. **அபேட்சகர்களின் ஆள் அடையாளம்.**-

* தகுதிகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது சகல விதத்திலும் பூரணமான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அபேட்சகர்கள் மாத்திரமே.
* நேர்முகப் பரீட்சையின்போது அனைத்து சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் உரியவாறு அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.
* நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் அடையாள அட்டைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

(i) ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை.
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் :**

(i) விண்ணப்பங்கள் 2020.02.13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "தொல்பொருளியல் பணிப்பாளர் தலைமை யதிபதி, சேர் மார்க்கஸ் பேர்னாந்து மாவத்தை, கொழும்பு 07" என்னும் முகவரிக்குக் கிடைக்கப்பெறக்கூடியவாறு பதிவு அஞ்சலில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அன்றைய தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்கப்பப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப் படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் அவர்களினது விண்ணப்பங்களை A4 அளவிலான கடதாசியில் தயார் செய்து முதல் பக்கத்தை இல. 1.0 தொடக்கம் 3.2 வரையிலும் 02 ஆம் பக்கம் இல. 3.3 தொடக்கம் 5.0 வரையிலும் மிகுதியை 03 ஆம் மற்றும் 04 ஆம் பக்கங்களிலும் உள்ளடங்கும் வகையில் தயார் செய்து தனது கையெழுத்தினால் பூர்த்தி செய்ய வேண்டும். (விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது உகந்ததென்ப துடன் தங்களது வசதிக்காக சரியாக தயார் செய்யப்பட்ட பரீட்சை விண்ணப்பத்தை தொல்பொருளியல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து (www.archaeology.gov.lk) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

(iii) விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்ட அலுவலர் பதவிக்காக விண்ணப்பித்தல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர் / சமாதான நீதவான்/சத்தியப் பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/முப்படையின் அதிகாரம் பெற்ற அலுவலர் அல்லது ரூபா 47,615 மாதாந்த திரட்டிய சம்பளமொன்றைப் பெறுகின்ற அரசாங்கத்தின் நிரந்தர பதவியொன்றை வகிக்கின்ற அலுவலர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(v) ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பிக்க வேண்டும்.

(vi) இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற் போதல் அல்லது தாமதமாதல் பற்றிய முறைப்பாடுகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

09. **பொய்யான தகவல்களை வழங்குதல்.**- உங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு தகவல் பொய்யான அல்லது தவறானதென ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்னர் தெரியவருமாயின் உங்களது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். அத்தகைய பொய்யான அல்லது தவறான தகவலொன்று ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமாயின் அதற்கான செயன்முறைகளுக்கு உட்பட்டு சேவையிலிருந்து விலக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வெற்றிடங்களை நிரப்பும் அல்லது நிரப்பாதிருக்கும் உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழு கொண்டுள்ளது.

11. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாதுள்ள ஏதேனுமொரு விடயம் சம்பந்தமாக அல்லது இந்த ஆட்சேர்ப்பு செயற்பாட்டினுள் ஏதேனுமொரு சிக்கலான நிலைமை ஏற்படுமிடத்து அது தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் இறுதித் தீர்மானங்களாகும்.

12. இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில உரைகளிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
பௌத்தசாசன, கலாசார மற்றும் மத அலுவல்கள்
அமைச்சு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பௌத்தசாசன, கலாசார மற்றும் மத அலுவல்கள் அமைச்சைச் சேர்ந்த தொல்பொருளியல் திணைக்களத்தின்**
**சட்ட அலுவலர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்தல் - 2019**

(அலுவலக உபயோகத்துக்காக மாத்திரமே)

(விண்ணப்பிக்கும் மொழிமூலத்துக்கான இலக்கத்தை கூட்டினுள் எழுதுக,
சிங்களம் - 2/ தமிழ் - 3/ ஆங்கிலம் - 4)

**குறிப்பு** : விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை மாற்ற முடியாது.

1.0 1.1 முழுப்பெயர் (திரு./ திருமதி/ செல்வி) :.................................................
(சிங்களத்தில்/ தமிழில்) .................................................
1.2 முழுப்பெயர் : .................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : .................................................
1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./ திருமதி/ செல்வி) : .................................................
(சிங்களத்தில்/ தமிழில்) .................................................
1.4 முதலெத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : .................................................
.................................................
உ-ம் : GUNAWARDHANA, M. G. B. S. K.

2.0 2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :.................................................
.................................................
2.2 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :.................................................
.................................................

3.0 3.1 பால் : (ஆணா / பெண்ணா என்பது) : ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.) பெண் - 1

3.2விவாகமானவரா/ விவாகமாகாதவரா என்பது : விவாகமானவர் - 1
(சம்பந்தப்பட்ட கூட்டினுள் எழுதுக.) விவாகமாகாதவர் - 2

3.3 பிறந்த திகதி : ஆண்டு : மாதம் : திகதி :

3.4 2020.02.13 ஆந் திகதிக்கு வயது :
வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

3.5 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

4.0 4.1 நேர்முகப்பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின்படி பெற்றுக்கொண்டுள்ள தகைமைகள் பற்றிய விபரம் :

| தகைமைகளைப் பெற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் | பெற்றுக்கொண்ட திகதி |
|---|---|
| ................................................. | ................................................. |
| ................................................. | ................................................. |

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப் பிரமாணம் செய்த திகதி : ......................

4.2 விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின் இல. 06 இன் கீழான ஒவ்வொரு தகைமையும் பெற்றுக்கொள்ளல் சம்பந்தப்பட்ட விபரம் : ........................................

4.3 மேலதிக கல்வித்தகைமைகள் : ........................................

4.4 மேலதிக தொழிற்றகைமைகள் : ........................................

4.5 மேலதிக அனுபவம் : ........................................

4.6 மொழித்தேர்ச்சி : ........................................

4.7 தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவு : ........................................

5.0 தாங்கள் எப்போதாவது ஒரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றமொன்றினால் தவறாளராக்கப்பட்டுள்ளீரா? (சம்பந்தப்பட்ட கூட்டினுள் (✓) அடையாளத்தை இடுக. (ஆமெனில் விபரம் தருக.)
........................................

6.0 விண்ணப்பதாரரின் உறுதியுரை :
இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் அனைத்து பகுதிகளும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனவும், என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானது என நிரூபிக்கப்பட்டால், நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் தகுதியற்றவனாவேன் எனவும் நியமனம் பெறப்பட்டதன் பின்னர் நிரூபிக்கப்பட்டால் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் எனவும் நான் அறிவேன் எனவும் அனைத்து சட்டதிட்டங்களுக்கும் நான் உட்படுவேன் எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திகதி : .................... ........................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

7.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :
இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ........................................
என்பவரை நான் நன்கு அறிவேன் எனவும் அவர் என் முன்னிலையில் ........................ ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

........................
கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

திகதி :....................
முழுப்பெயர் :.....................
பதவி :.....................
முகவரி :.....................
(அலுவலக முத்திரையால் உறுதிப்படுத்தவும்.)

8.0 திணைக்களத் தலைவரின் பரிந்துரை :

திரு./ திருமதி/ செல்வி ........................................ என்பவர் இந்நிறுவனத்தில் சேவை செய்கின்றார் எனவும் அவரால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவை எனவும், வேலை மற்றும் வருகை திருப்திகரமானது எனவும் அவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் எதுவும் இல்லை எனவும் இப்பதவிக்காக அவர் தெரிவு செய்யப்படுமாயின் இந்நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் பரிந்துரைக்கிறேன்.

............................
திணைக்கள/ நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :...............
பதவிப்பெயர் :.................
முகவரி :.................
திகதி :.................
(அலுவலக முத்திரையை இடுக.)

01-485

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

(மகளிர், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு)

மகளிர், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் பட்டப்பாடநெறிகளையும், உயர் டிப்ளோமா, டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகளையும் நடாத்தி வருகின்றது. இது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 25ஏ பிரிவின் கீழ் பட்டமளிப்பு நிறுவனமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனமாகும்.

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் 2020 ஆம் ஆண்டிற்கான பின்வரும் பாடநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

| பாடநெறியின் தலைப்பு | பாடநெறிக் காலம் (மாதம்) (ஞாயிற்றுக் கிழமை மட்டும்) | பதிவுக் கட்டணம் மற்றும் பாடநெறிக் கட்டணம் (ரூ.) |
|---|---|---|
| சமூகப்பணி முதுமாணி (தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிமூலம்) | 24 (வார இறுதி) | ரூபா 227,000.00 |
| சமூகப்பணி உயர் டிப்ளோமா பாடநெறி (தமிழ் மற்றும் சிங்களம் மொழிமூலம்) | 24 (முழு நேரம்/பகுதி நேரம்) | முழு நேரம் :<br>ரூபா 15,000.00 (பதிவுக்கட்டணம் மாத்திரம் அறவிடப்படும்)<br>பகுதி நேரம் :<br>ரூபா 76,000.00 |
| உளவளத்துணை உயர் டிப்ளோமா பாடநெறி (சிங்களம் மற்றும் தமிழ்) | 21 (வார நாட்கள்/வார இறுதி) | ரூபா 76,000.00 |

இளமாணி பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் சமூகப்பணி முதுமாணி பட்டத்தினை பயில்வதற்கான அடிப்படை தகைமையாகக் கொள்ளப்படும். சமூகப்பணி உயர் டிப்ளோமா பாடநெறியினை பயில்வதற்கு க. பொ. த. (உ./ த.) சித்தியடைந்திருப்பது அடிப்படை தகைமையாகக் கருதப்படும். உளவளத்துணை உயர் டிப்ளோமா பயில்வதற்கு க. பொ. த. (உ./த.) சித்தியடைந்திருப்பதுடன் 06 மாதங்களுக்குக் குறையாத 30 Credits கொண்ட உளவளத்துணை டிப்ளோமாவை பயின்றிருத்தல் அல்லது அதற்கு சமமான உளவளத்துணை உளவியல், தொழில் வழிகாட்டல் அல்லது சமூகப்பணி இளங்கலைமாணி பாடங்களைக் கொண்ட இளங்கலைமாணி அல்லது உயர் டிப்ளோமாவினை பெற்றிருத்தல் வேண்டும்.

**மேற்குறித்த பாடநெறிகள் சீதுவையில் அமைந்துள்ள பிரதான நிலையத்தில் மாத்திரம் நடைபெறும்.**

**டிப்ளோமா பாடநெறி**

| பாடநெறியின் தலைப்பு | பாடநெறிக் காலம் (மாதம்) (வார நாட்களில், வார இறுதி நாட்களில்) | பதிவுக் கட்டணம் மற்றும் பாடநெறிக் கட்டணம் (ரூ.) |
|---|---|---|
| **உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி** (தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம்)<br>சீதுவை பிரதான அலுவலகம், அநுராதபுரம், அம்பாறை, கிளிநொச்சி, ரண்ண (அம்பாந்தோட்டை) போன்ற நிலையங்களில் இடம்பெறும் | 21 (வார நாட்கள்/வார இறுதி) | ரூபா 51,000.00 |
| **சிறுவர் பாதுகாப்பு டிப்ளோமா பாடநெறி** (சிங்களம் மற்றும் தமிழ்)<br>சீதுவை பிரதான அலுவலகம், அநுராதபுரம், அம்பாறை, கிளிநொச்சி, ரண்ண (அம்பாந்தோட்டை) போன்ற நிலையங்களில் இடம்பெறும் | 18 (வார நாட்கள்/வார இறுதி) | ரூபா 51,000.00 |
| **முதியோர் பராமரிப்பு டிப்ளோமா பாடநெறி** (சிங்களம் மற்றும் தமிழ்)<br>சீதுவை பிரதான அலுவலகம், அநுராதபுரம், அம்பாறை, கிளிநொச்சி, ரண்ண (அம்பாந்தோட்டை) போன்ற நிலையங்களில் இடம்பெறும் | 18 (வார நாட்கள்/வார இறுதி) | ரூபா 51,000.00 |

**டிப்ளோமா பாடநெறி**

| பாடநெறியின் தலைப்பு | பாடநெறிக் காலம் (மாதம்) (வார நாட்களில், வார இறுதி நாட்களில்) | பதிவுக் கட்டணம் மற்றும் பாடநெறிக் கட்டணம் (ரூ.) |
|---|---|---|
| **சமூகப்பராமரிப்பு டிப்ளோமா பாடநெறி** (சிங்களம் மற்றும் தமிழ்)<br>சீதுவை பிரதான அலுவலகம், அநுராதபுரம், அம்பாறை, கிளிநொச்சி, ரண்ண (அம்பாந்தோட்டை) போன்ற நிலையங்களில் இடம்பெறும் | 18 (வார நாட்கள்/வார இறுதி) | ரூபா 51,000.00 (வார இறுதி) |

* இப்பாடநெறிகளுக்கான அடிப்படைத் தகுதியாக க. பொ. த. (உ./த.) சித்தியடைந்திருப்பதோடு, மேற்குறித்த பாடநெறிகளுடன் தொடர்பான அனுபவம் இருப்பது விசேட தகைமையாக கருதப்படும்.

**சான்றிதழ் கற்கைநெறி**

| பாடநெறியின் பெயர் | கால எல்லை (மாதம்) | பாடநெறிக் கட்டணமும் பதிவுக் கட்டணமும் | |
|---|---|---|---|
| | | வார நாட்களில் (ரூ.) | வார இறுதி நாட்களில் (ரூ.) |
| **சமூகப்பணி சான்றிதழ் கற்கைநெறி** (தமிழ், சிங்களம், ஆங்கிலம்) சீதுவை பிரதான அலுவலகம், அநுராதபுரம், அம்பாறை, கிளிநொச்சி, ரண்ண (அம்பாந்தோட்டை) போன்ற நிலையங்களில் இடம்பெறும் | 06 | ரூபா 11,000.00 | ரூபா 21,000.00 |
| **உளவளத்துணை சான்றிதழ் கற்கைநெறி** (தமிழ், சிங்களம், ஆங்கிலம்) சீதுவை பிரதான அலுவலகம், அநுராதபுரம், அம்பாறை, கிளிநொச்சி, ரண்ண (அம்பாந்தோட்டை) போன்ற நிலையங்களில் இடம்பெறும் | 06 | ரூபா 11,000.00 | ரூபா 21,000.00 |
| **சிறுவர்களை மையப்படுத்திய சமுதாய அபிவிருத்திச் சான்றிதழ் கற்கைநெறி** (தமிழ், சிங்களம்) சீதுவை பிரதான அலுவலகம், அநுராதபுரம், அம்பாறை, கிளிநொச்சி, ரண்ண (அம்பாந்தோட்டை) போன்ற நிலையங்களில் இடம்பெறும் | 06 | ரூபா 11,000.00 | ரூபா 21,000.00 |

க. பொ. த. (சா./த.) சித்தியடைந்திருத்தல் மேற்குறித்த பாடநெறிக்கு விண்ணப்பிப்பதற்கான அடிப்படைத் தகுதியாகும்.

* நிறுவனங்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் பாடநெறிகளை நடாத்த முடியும் என்பதுடன் ஆகக் குறைந்தது 40 விண்ணப்பப்படிவங்கள் இருத்தல் வேண்டும்.

* கிடைக்கப்படும் விண்ணப்பங்கள் எண்ணிக்கைக்கேற்ப திகதியும் நிலையமும் தீர்மானிக்கப்படும்.

**பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் முறை.**- விண்ணப்பப் படிவங்களை www.nisd.ac.lk எனும் எமது இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் 2020.02.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த பாடநெறி, மொழி மூலம் மற்றும் தேர்ந்தெடுத்த நிலையம் ஆகியவற்றை குறிப்பிடுதல் வேண்டும்.

பதிவாளர்,
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,
லியனகேமுல்லை, சீதுவை.

மேலதிக விபரங்களுக்கு : 011-2882506-107/ 011-2076021 www.nisd.ac.lk

1-462

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

### வ/ப பொறுப்புள்ள கம்பனியின் கூட்டிணைப்பு அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல் இத்தால் வழங்கப் படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஒலின்வே இன்டர்நெஷனல் ( பிறைவட்) லிமிட்டட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 00216829
கூட்டிணைப்புத் திகதி: 2019, ஒற்றோபர் 23
பதிவு முகவரி : 133/3,வெலங்கொள்ள வீதி, யந்தாம்பலாவ, குருநாகல்

கம்பனிச் செயலாளர்.

1- 288

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம் கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : அக்சென்ட் மெனேஜ்மன்ட் ( பிறைவட்) லிமிடட்
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2016. 01.26
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 111479
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல.130, 4/8, மெயின் ஸ்ட்ரீட், கொழும்பு -11

கம்பனிச் செயலாளர்.

1- 296

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ரிப்கி டிரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் (பீவீடி) எல்டிடீ
பதிவிலக்கம் : பீவீ 121208
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.03.28
பதிவு முகவரி: இல. 256/1, கடற்கரை வீதி, புதிய காத்தான்குடி- 06

கம்பனிச் செயலாளர்.

1- 347

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : சொர்கம் மெட்ரிமொனி ( பிரைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 00218364
பதிவுத் திகதி : 2019, திசெம்பர் 10
பதிவு செய்யப்பட்ட முகவரி: இல. 102/A, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

கம்பனிச் செயலாளர்.

1- 374

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

முல்லேரியாவ, புது நகரம், அக்கொண, இலக்கம் 1/1 என்ற இடத்தில் வசிக்கும் ( தே.அ.அ.இல. 597371098V ஐ உடைய) லக்ஸ்மி சந்திராணி விக்ரமஆரச்சி ஆகிய நான், கொழும்பு மாவட்டத்தின் பிரசித்த நொத்தாரிசு காரியகரவன தோண இந்திராணி சேனாரத்னவினால் 2008, மாசி மாதம் 09 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 479 ஆம் இலக்க அற்றோணித்தத்தவத்தின் மூலம் எனது அற்றோணித் தத்துவக்கரராராக முல்லேரியாவ, புது நகரம் , அக்கொண, இலக்கம் 1/1 என்ற முகவரியில் வதியும் நந்தன அருண விக்கிரமஆரச்சி (தே.அ.அ.இல. 542702109V ஐ உடைய) என்பவரை நியமித்திருந்த அற்றோணித் தத்துவத்தை 2020, தை மாதம் 10 ஆந் திகதி முதற்கொண்டு சட்டரீதியாக இரத்துச் செய்வதோடு இத்தால் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்ளும் வகையில் அறிவிக்கின்றேன்.

லக்ஸ்மி சந்திராணி விக்ரமஆரச்சி.

1- 376

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

நொச்சியாகம, முதிதாகம, சத்துரங்க இல்லத்தில் வதியும் தேசிய அடையாள அட்டை இலக்கம் 606280483V ஐ உடைய மாலனி கஜசிங்ஹகமகே ஆகிய நான், அநுராதபுரம் பிரசித்த நொத்தாரிசு திரு. W.M.C.B. வீரக்கோன் , 2012, மாச்சு மாதம் 20 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 533, குருநாகல் பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் பதிவுசெய்யப்பட்ட அற்றோணித்தத்துவத்தின் மூலம், நொச்சியாகம, முதிதாகம, சத்துரங்க இல்லத்தில் வதியும் தேசிய அடையாள அட்டை இலக்கம் 730931514V உடைய ஆறுமுகம் ஜயகுமாருக்கு வழங்கிய அற்றோணித் தத்துவத்தை இந்த அறிவித்தல் தினத்திலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் இத்தால் இரத்துச் செய்யப்படுவதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இது முதற்கொண்டு மேற்படி அற்றோணித் தத்துவம் மூலம் மேற்கொள்ளப்படும் எந்த வொரு நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாக இருக்கப்போவ தில்லையென அறிவிக்கின்றேன்.

மாலனி கஜசிங்ஹகமகே.

1- 377

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தெஹிவளை, ரொபர்ட் பிளேஸ், இல.15 எனும் முகவரியைச் சேர்ந்த (தற்போது இல. 44, Hawkesbury Street, Pakenham, VIC 3810 Australia) சமீர கசுன் எரவ்வல ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு பத்மி உதேனிகா அபேசிறிவர்த்தன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 769 மற்றும் 2014.08.16ஆந் திகதிய அற்றோணித்தத்துவத்தின் மூலம் தெஹிவளை, ரொபர்ட் பிளேஸ், இல. 15 எனும் முகவரியைச் சேர்ந்த ஹல்பிட்ட ஆச்சாரிகே நாலினீ ஸ்வர்னலதா என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் இது முதல் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுகின்றது என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன். இதன் பின்னர் எனது சார்பாக குறித்த அற்றோணித் தத்துவகாரரால் நிகழ்த்தப்பட்ட எந்தவொரு செயலுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதை அறியத்தருகின்றேன்.

சமீர கசுன் எரவ்வல.

1- 398

---

## ஏல விற்பனைகள்

### டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ

(டிஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீயின் பதிலாள்)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை

#### பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை

2183/ 757/146 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்:-

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கண்டி மாநகர சபை எல்லைகளுக்கு உட்பட்ட, பஹிரவகந்த 236 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவு, பஹிரவகந்தயில் அமைந்துள்ள, நிக்கமெடித்தேஹேன என அழைக்கப்படும் ( 46228 ஆம் இலக்க கண்டி மாவட்ட நீதிமன்ற வழக்கின் 04 ஆம் இலக்கத் துண்டின் பிரிவு) அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் ஆர். சி. ஓ.டி. லா மோட்டே அவர்களால் வரையப்பட்ட 1979, ஓகத்து மாதம் 26 ஆந் திகதியிடப்பட்ட 2023/A ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 4E1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.

காணியின் விஸ்தீரணம் : 0ஏ.0றூ.20பே.

அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக கண்டி காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஹனீபா பீபியின் காணியில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு அடி அகலமான பாதை உரிமையுடன்.

பிரசித்த நொத்தாரிசு எஸ். ஹபுதந்திரி, பிரசித்த நொத்தாரிசு என். எஸ். ரணதுங்க, பிரசித்த நொத்தாரிசு பி. எஸ். அபேவிக்ரம ஆகியோரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014, ஒற்றோபர் மாதம் 27, 2014,ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30, 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதியிகளிடப்பட்ட 2183/ 757/ 146 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் கண்டியைச் சேர்ந்த மேரி ஆன் திலீஷியா விக்கிரமசிங்க மற்றும் பத்திரவத்தே சமன் பத்திரண எனவும் பத்திரணவத்தே சமன் பத்திரண (இதன் பின்னர் கூட்டுறவுக் கடன் பெற்றவர் என அழைக்கப்படும் ) அவர்களால்,

டிஎப்சீசீ வங்கி பீ எல்சீ க்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.

டிஎப்சீசீ வங்கி பீஎல்சீயினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை மு. ப 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/2% மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும் ;
(4) மொத்த விளம்பரச் செலவு 90,000 ரூபா ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,000;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2000 ரூபா.

கொள்முதல் விலையின் மிகுதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்டரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 011- 2371371 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டிஎப்சீசீ வங்கி பீஎல்சீயின் சட்டப்பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.'

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்
128 வருடகால மகோன்னத சேவை.

தலைமை அலுவலகம்:
24, டொரிங்டன் வீதி, கண்டி
தொலைபேசி: 081-2227593
தொலை/பக்ஸ்: 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்:
6A, பெயார் பீல்ட் கார்டன், கொழும்பு 8
தொலைபேசி: 011-2671467, 011-2671468
தொலை/பெக்ஸ்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com
இணைய தளம்: www.sandslanka.com

1- 285

---

### செலான் வங்கி பீஎல்சீ - யக்கல கிளை
### பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏலவிற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

யக்கலயைச் சேர்ந்த கனேபொல ஆச்சிகே மைத்திரி சந்தருவன் கனேபொல கடப்பாடுடையவராகவும்/ ஈடுவைத்தவராகவும் செலான் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு கே.டி.ரீ.கே.களுஆரச்சியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.08.01ஆந் திகதியிடப்பட்ட 958 ஆம் இலக்க மற்றும் 2015.03.27ஆந் திகதியிடப்பட்ட 1069 ஆகிய இரு ஈட்டு முறிகள் மீதான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள்.

***2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு காணி அமைந்திருக்கும் இடத்திலேயே செலான் வங்கி பீஎல்சீயினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.***

#### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், கம்பஹா பதிவுப் பிரிவிற்குள், சியனே கோறளையின் மெதபத்துவில் கம்பஹா மாநகர சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவிற்குள், யக்கல வடக்கு இல. 231, கிராம அலுவலர் எல்லைக்குள் யக்கலயில் அமைந்துள்ள ரண்வெலி பெதெச வரிமதிப்பீட்டிலக்கம் 64E ஐக் கொண்ட கொனிகஹலந்த, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஜே.பீ. என். ஜயசுந்தரவினால் வரையப்பட்ட 2014.07.04 ஆந் திகதியிடப்பட்ட 10256 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள A என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டின் விஸ்தீரணம் (0ஏ.1றூ.5பே.) மற்றும் சொல்லப்பட்ட 10256 ஆம் இலக்க வரைபடத்திக்கேற்ப கட்டடங்கள், மரங்கள் மற்றும் பயிர்ச்செய்கைகள் உட்பட அனைத்துமுடனான இடம்.

அத்துடன் வழியுரிமையுடனானதும் மேலானதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள காணி.

01. யக்கலயில் அமைந்துள்ள கோனிகஹலந்த என அழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எல். ஜே. லியனகேயினால் வரையப்பட்ட 1996.11.15ஆந் திகதியிடப்பட்ட 6816C ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப் பட்டுள்ள 6J8 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டின் முன்சொல்லப்பட்ட விஸ்தீரணம் ஒன்பது தசம் ஐந்து ஒன்று பேர்ச். ( 0ஏ.0றூ.9.51பே.)

02. யக்கலயில் அமைந்துள்ள கோனிக ஹலந்த என அழைக் கப்படும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எல். ஜே. லியனகேயினால் வரையப்பட்ட 1996.11.15ஆந் திகதி யிடப்பட்ட 6816C ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 6J9 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டின் முன்சொல்லப்பட்ட விஸ்தீரணம் ஆறு தசம் ஏழு இரண்டு பேர்ச். ( 0ஏ.0றூ.6.72பே.)

03. யக்கலயில் அமைந்துள்ள கோனிக ஹலந்த என அழைக் கப்படும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எல். ஜே. லியனகேயினால் வரையப்பட்ட 1996.11.15ஆந் திகதி யிடப்பட்ட 6816C ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 6L என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டின் முன்சொல்லப்பட்ட விஸ்தீரணம் ஐந்து தசம் ஆறு பேர்ச். ( 0ஏ.0றூ.5.6பே.)

04. யக்கலயில் அமைந்துள்ள கோனிக ஹலந்த என அழைக் கப்படும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எல்.ஜே.லியனகேயினால் வரையப்பட்ட 1996.11.15ஆந் திகதியிடப்பட்ட 6816C ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 6K என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டின் முன்சொல்லப்பட்ட விஸ்தீரணம் மூன்று தசம் ஆறு மூன்று பேர்ச். ( 0ஏ.0றூ.3.63பே.)

**காணிக்கும் பிரவேசிக்கும் வழி.**- யக்கல நான்கு வழிச் சந்தியிலிருந்து புறப்பட்டு கொழும்பு கண்டி வழியாக கண்டிப்பக்கத்துக்கு சுமார் 100 மீற்றர் சென்றதும் இடது பக்கத்துக்குத் திரும்பி சுமார் 150 மீற்றர் தூரம் வரை மாநகர சபை வீதியூடாகச் செல்லும் போது வலது கைப்புறத்தில் இந்த இடம் அமையப்பெற்றுள்ளது.

**தீர்மான முடிவு அறிவித்தலுக்கு.**- 2019.06.14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியையும் 2019.05.27 ஆந் திகதிய "டேலி மிரர்", "லங்காதீப" மற்றும் 2019.06.03 ஆந் திகதிய "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(1) கொள்வனவு விலையின் 10 %;
(2) உள்ளூராட்சி அதிகார சபைக்கான வரி 01%;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5%;
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2500;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 1000 வீதம்;
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்

மிகுதி 90 வீதத்தையும் இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு, ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்குச் செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும்.

திணைக்களத் தலைவர், (சட்டம்), செலான்வங்கி பீ.எல்.சீ. , இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு 3.
தொ. பே. இலக்கங்கள்: 011-2456485,011- 2456479 மற்றும் 011-2456488 .

சந்திமா பிரியதர்சினி கமகே,
நீதிமன்ற ஆணையாளர்,
பகிரங்க ஏல விற்பனையாளர்,
விலை மதிப்பீட்டாளர்.

இல. 9-I ஹைலெவல் வீதி , சர்வோதய மாவத்தை,
பனாகொட, ஹோமாகம.
தொலைபேசி: 071-4318252.

1-378

**செலான் வங்கி பீஎல்சீ - நாவல கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

"கடன்பட்டோர் /ஈடுவைத்தோர்" என்ற வகையில் தெஹிவளை யைச் சேர்ந்த பரணவிதானலாகே டில்ஷான் எசிநகத் பொதேஜு என்பவரினால் வத்தளை பதிவு அலுவலகத்தில் பதிவு இல. பீவீ 69089 கம்பனி கூட்டிணைப்பு சட்டம் இலக்கம் 2007ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கத்திற்கமைய செரன்டீப் பூட்ஸ் (பிரைவட்) லிமிட்டட் நிறுவனத்திற்காக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீ க்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து .

தொடர்மாடி X/FO/U1

தொடர்மாடி X/FO/U1, வரிமதிப்பீட்டு இல. 41, பாடசாலை ஒழுங்கை, தெஹிவளை இன் விபரம் பின்வமாறு.-

(அ) தொடர்மாடி X/FO/U1 தரைதளம்
(ஆ) தொடர்மாடி API தரிப்பிடம்

(அ) தொடர்மாடி X/FO/U1 தரைத்தளம் எல்லை விபரம் பின்வருமாறு
வடக்கு : CEI ;
கிழக்கு : CEI மற்றும் CE3 ;
தெற்கு: AP1 மற்றும் இணை பகுதி AP2 இணை;
மேற்கு : வீதி.
தாள் நிலம்: கொங்கிறீட் நிலப் பகுதி;
கூரை: அடுக்குமாடி X/F1/U1
தளத்தின் பரப்பு : 133 சதுர மீற்றர்.

(ஆ) தொடர்மாடி API (தரிப்பிடம்) தரைத்தளம் எல்லை விபரம் பின்வருமாறு:
வடக்கு : அடுக்குமாடி X.FO/U1 மற்றும் CEI;
கிழக்கு : CEI;
தெற்கு : CEI மற்றும் இணை பகுதி AP2;
மேற்கு : அடுக்குமாடி X/FO/U1.
தாள் நிலம் : கொங்கிரீட் பகுதி
சிகரம் : அடுக்குமாடி X/F1/U1,
தளத்தின் பரப்பு : 14 சதுர மீற்றர்.

அடுக்குமாடித் தொடரின் பொது விதிகள் இதில் அடங்கும்

(அ) அடுக்குமாடித் தொடர் அமைந்திருக்கும் பகுதியின் தோற்றம்.
(ஆ) அடித்தளம், தூண், இரும்பு உத்தரம், ஆதாரங்கள் மற்றும் கட்டடத்தின் கூரை
(இ) மின்சாரம் தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி, மறுபரவல், நீர்க் குழாய், நீர்த் தாங்கி, நிலத்தடி தொட்டி, மேல் நீர்த் தாங்கி, பம்ப் ஹவுஸ், குழாய்கள்,கழிவு நீர் குழாய் மற்றும் கழிவுப்பொருள் அகற்றல் போன்ற மத்திய சேவைகள்.
(ஈ) பராமரிப்பு பாதுகாப்பு அல்லது பொது பாவனை மற்றும் எல்லா பகுதிகளுக்கும் மற்றும் இடத்திற்கு தேவையான வசதிகள்

உரிமம் பெற்ற அளவையாளரான காமினி பீ.தொடன்வெல என்பவரினால் 2013, யூன் 24 ஆம் திகதியிடப்பட்ட தொடர்மாடியின் நிலவரைபட இல. 9623 இற்கு அமைய அதில் வரையறை செய்து விபரிக்கப்பட்ட பொது ஆதாரப் பொருட்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ) CE1
(i) இடம் - நிலத்தளம்
(ii) விபரம் - திறந்த வெளி
(iii) அடுக்குமாடிக்குச் செல்லும் வழி - அடுக்குமாடிக்குச் செல்லும் வழி X/FO/U1 மற்றும் X/F1/U1

(ஆ) CE2
(i) இடம் - நிலத்தளம்
(ii) விபரம் - திறந்த வெளி

(இ) CE3
(i) இடம் -நில தளம் மற்றும் மேல் தளம்
(ii) விபரம் - ஏறும் வழி
(iii) அடுக்குமாடிக்குச் செல்லும் வழி - இடைநிலை-X/F1/U1அடுக்குமாடிக்குச் செல்லும் வழி

**அடுக்குமாடிச் சொத்துக்களுக்கான அணுகல்**

அங்கு சுதந்திரமாக செல்வதற்குரிய உரிமை மற்றும் உள்ளே செல்ல வெளிவர அங்கு செல்வதற்குரிய உரிமை அந்த இடத்திற்கு உரியவர்களும் அவர்கள் உற்றார் உறவினர்களும் எந்த நேரத்திலும் உட்செல்லல் வெளிவரும் உரிமை மற்றும் ஊழியர்கள், குத்தகைக்காரர்கள், பார்வையாளர்கள் அழைப்பாளர்கள் மற்றும் இதை போல் மற்றும் இதை போல் மற்றும் உரிமை கொண்ட அனைத்து நபர்களுக்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அனைத்து நோக்கங்களுக்காகவும் அடுக்குமாடி தொடர்பாகவும் அறிவிப் பாளரால் பகல் அல்லது இரவு நேரங்களிலும் இது போன்ற உரிமைகளையும் பிற நபர்களுடனும் பொதுவானதும் மற்றும் மின்சார வயர்கள் அதன் மேலாகவும் அதனூடகவும் செல்லும் உரிமை மற்றும் நீர், கேஸ் குழாய், கழிவு குழாய் மற்றும் பிரதான மற்றும் மற்றைய கருவிகள் வீதியினூடாகவும் அதன் மேலாகவும் செல்ல உரிமையுடையது. இது அனுமதிபெற்ற நிலஅளவையாளர் காமினி டீ. தொடன்வெல என்பவரினால் தொடர்மாடி நிலவரைபட இல. 9623 இல் 2013, யூன் மாதம் 24 ஆந் திகதியிடப்பட்டு விபரிக்கப்பட்டுள்ளது.

மேல்மாகாணம்,கொழும்புமாவட்டத்தில்,சல்பிட்டி கோரளை பள்ளே பத்து கல்கிசை - தெஹிவளை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் தெஹிவளை வட்டாரம் இல. 05 , ஹத்போதிவத்த இல. 10350 கிராம அலுவலர் பிரிவில் களுபோவிலவில் அமைந்துள்ள "ஹொரகஹாவத்த"என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நில அளவையாளர் எஸ். எச். பீ. யோசவ் என்பவரால் 1967, பெப்புருவரி 12 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 77 இல் துண்டு 6 இல் சகலதும் அளவிடப்பட்டு குறிக்கப்பட்டு மூன்று பேர்ச் (0ஏ.0றூ.03பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2020, சனவரி மாதம் 28 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்வேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.**- வில்லியம் சந்தியிலிருந்து ஆஸ்பத்திரி வீதியால் சுமார் 1 கி.மீ. தூரம் வரையுள்ள கொஹுவளை வரை சென்று இடது பக்கமாக உள்ள அல்விஸ் அவன்யூவினால் திரும்பி சுமார் 100 மீ. வரை சென்று அங்கிருந்து இடதுபக்கமாக திரும்பி 125 மீ. தூரம் சென்று இடது பக்கமாக உள்ள ஸ்கூல் வீதியால் 100 மீ. தூரம் சென்றால் குறிக்கப்பட்ட அடுக்குமாடி இடது பக்கத்தில் அமைந்திருக்கும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.**- தயவு செய்து 2019.10.18ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2019.10.23ஆந் திகதிய "டெய்லி மிரர்" , "லங்கா தீப" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகையையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் விதம்.**- வெற்றிகரமான கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளை பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையில் பத்து வீதம் 10% ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி ஒரு வீதம் (1%) ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2.5%);
(4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் 3,000 ரூபா ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் 1000 ரூபா.
(6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு;

(7) கொள்வனவு விலையின் மிகுதி 90 % அல்லது இலங்கை அரசினால் விதிக்கப்பட்ட வரிகள் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதித் தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன் வைப்புச் செய்த தொகையில் 10 % கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

"காணி உறுதி மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை பிரத்தியேக முகாமையாளர்-சட்டத்துறை, செலான் வங்கி பீஎல்சீ, செலான் டவர், இல.90, காலி வீதி, கொழும்பு 3" என்னுமிடத்தில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011- 2456491,011-2456481.

"மேற்படி ஏல விற்பனையை வங்கியினால் முன்னறிவித்தலின்றி இரத்துச்செய்யவும் இடைநிறுத்தவும் முடியும்"

துசித கருணாரத்ன (ச. நீ.),
உத்தரவுபெற்ற ஏலதாரர் மற்றும்
நீதிமன்ற ஆணையாளர்.

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ,
தொலைபேசி: 011-3068185, 2572940

1- 375

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

*2020 இன் இல. 01*

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவை யினால் இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. டபிள்யூ. எம். டி. ஜே. பெர்னாண்டோ அவர்கள், 2018, நவெம்பர் மாதம் 13 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை அமைச்சரவையின் சிரேட்ட மேலதிக செயலாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

எஸ். அமரசேக்கர,
அமைச்சரவைச் செயலாளர்.

2019, திசெம்பர் 19.

01-307/1

---

*2020 இன் இல. 02*

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவை யினால் இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திருமதி சி.கே.விஜேமான்ன அவர்கள், 2019, ஓகத்து மாதம் 05 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை அமைச்சரவை அலுவலகத்தின் மேலதிக செயலாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

எஸ். அமரசேக்கர,
அமைச்சரவைச் செயலாளர்.

2019, திசெம்பர் 19.
01-307/2

*2020 இன் இல. 03*

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவை யினால் திரு. ஜீ. கே. ஏ. சமிந்த குமார குலரத்ன அவர்கள், ஒப்பந்த அடிப்படையில் 2019, திசெம்பர் மாதம் 05 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக தற்போதைய பிரதம அமைச்சர் பதவியினை வகிக்கும் அத்தகைய காலம் வரை பிரதம அமைச்சரின் அலுவலகத்தில் மேலதிக செயலாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

எஸ். அமரசேக்கர,
அமைச்சரவைச் செயலாளர்.

2019, திசெம்பர் 19.

01-307/3

---

*2020 இன் இல. 04*

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவை யினால் திரு. கணேஷ் ஆர். தர்மவர்த்தன அவர்கள், ஒப்பந்த அடிப்படையில் 2019, திசெம்பர் மாதம் 06 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக தற்போதைய பிரதம அமைச்சர் பதவியினை வகிக்கும் அத்தகைய காலம் வரை பிரதம அமைச்சரின் அலுவலகத்தில் மேலதிக செயலாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

எஸ். அமரசேக்கர,
அமைச்சரவைச் செயலாளர்.

2019, திசெம்பர் 19.
01-307/4

## அரசாங்க அறிவித்தல்கள்

**தம்பவின்ன திட்டம் - 2019/2020 பெரும்போக விவசாய கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்**

வெலிமடை பிரதேச செயலாளர் பிரிவில் தம்பவின்ன திட்டத்தின் 2019/2020 பெரும்போக விவசாய கூட்டம் 2019.11.21 ஆந் திகதி மெகெதரகம வித்தியாலயத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் பின்வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| 01. | பயிர்செய்வதற்கு தீர்மானிக்கப் பட்ட நிலத்தின் அளவு | - | 225 ஏக்கர் |
| 02. | பயிர்செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட பயிர்வகை | - | நெல்/மேல் நாட்டு மரக்கறி |
| 03. | வாய்க்கால் சுத்தப்படுத்தல் மற்றும் மண், அகற்றல் இறுதித் திகதி | - | 2019.11.30 |
| 04. | முதலாவது நீர் விநியோகம் | - | 2019.12.01 |
| 05. | நிலம் பண்படுத்தி முடிக்கும் திகதி | - | 2020.01.20 |
| 06. | பயிர்செய்து முடிப்பதற்கான இறுதித் திகதி | - | 2020.01.25 |
| 07. | நீர் விநியோகிப்பதற்காக தீர்மானிக்கப்பட்ட திகதி | - | 2020.02.06 |
| 08. | இறுதியாக நீர் விநியோகித்தல் | - | 2020.06.05 |
| 09. | வாய்க்கால் சுத்தப்படுத்தாமைக்கான தண்டப் பணம் (ஒரு நாள் ஊதியம்) | - | ரூபா 1,500.00 |
| 10. | நீர்ச் சங்க தீர்மானத்தின்படி நீர் விநியோகம் நடைமுறைப்படுத்தப்படும். | | |

டபிள்யூ. எம். சீ. வீரசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
வெலிமடை.

பிரதேச செயலகம்,
வெலிமடை,
2019, திசெம்பர் 18.

01-305

**காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல்**
**(அத்தியாயம் 120)**

கீழ்க் குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் II ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் I ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமாக III ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2020.10.01 தொடக்கம் 2020.01.17 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு குளியாப்பிட்டிய காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமாக எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2020.01.31 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

எமது இல. : ஆர்ஜீ/என்பீ/11/2/112/2017/ஏடு. தயா.
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல.234/ஏ3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| *நிரல் I* பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் சிதைவடைந்த ஏடுகள் பற்றிய விபரங்கள் | *நிரல் II* காணி பற்றிய விபரம் | *நிரல் III* பதிவு செய்யப்பட்ட உறுதிகள் பற்றிய விபரம் |
| --- | --- | --- |
| குருநாகல் மாவட்டத்தின் குளியாப்பிட்டிய காணிப் பதிவகத்தின் K பிரிவின் 240 ஆவது புத்தகத்தின் 135 ஆவது ஏடு. | வடமேல் மாகாணத்தின், குருநாகல் மாவட்டத்தின் கட்டு/ஹத் பற்று கட்டு/வடக்கு கோறளையில் வஸ்ஸவில்ல திக்ஹரயில் அமைந்துள்ள “கல்பொல எஸ்டேட்” என்னும் காணியின் லொட் 01 இற்கான எல்லைகள் :<br>வடக்கு : பாதை, மர்தேலிஸ் அப்புஹாமி இற்கு உரித்தான காணி, J. E. பாலசூரியவின் காணி ;<br>கிழக்கு : மர்தேலிஸ் அப்புஹாமிகே மற்றும் ஏனையோருக்கு உரிய காணி, J. E. பாலசூரியவின் காணி, லொட் 03 ;<br>தெற்கு : லொட் 02 மற்றும் சந்ரசேன இற்குரித்தான காணி ;<br>மேற்கு : பாதை.<br>பரிமாணம் 25ஏ.00றூ.30.97பே. | 1. W. வன்னிஆரச்சி பி. நொ. ஆல் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 2018.10.21 ஆந் திகதிய 1852 ஆம் இலக்கமுடைய ஈட்டை இரத்துச் செய்தல். |

01-320

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்**

*394 (3) ஆம் பிரிவின் கீழான “கெட்மர்ஜ் (பிறைவேட்) லிமிட்டெட்” இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்*

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2013.12.05 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட “கெட்மர்ஜ் (பிறைவேட்) லிமிட்டெட்” எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு அறிய முடிகிறது.

